1973 பிப்ரவரி 5]

காலத்திற்கு தவருமல் இந்த மருந்தைச் சாப்பிடவேண்டியிருக்கிறது. இது உதவித் தொகையே தவிர, உணவுக்குச் செலவாகும் முழுத்தொகையும் அல்ல. அப்படி வழங்குவதற்கும் இயலாது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த காச நோயாளிகளுக்குக் கொடுக்கப்படுகிற உதவித் தொகை 1967-ல் பிக்ஸ் செய்யப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினூர்கள். அதை அதிகப்படுத்த வேண்டுமென்று ஏதாவது பரிந்துரை நாகர்கோவிலில் உள்ள டி.பி. மருத்துவ மனையிலிருந்து வந்துள்ளதா? அப்படி வந்திருந்தால் அதன் விவரம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நாகர்கோவில் மருத்துவமனையைப் பொறுத்தவரையில் உள் நோயாளிகளுக்கு வழங்கும் சிகிச்சை முக்கியத்துவம் பெறும். இது ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனையிலும், வட்ட மருத்துவ மனையிலும் உள்ள புற பிணியாளர்களுக்கும்--டோமிசைல்ட் கிமோதராபி என்னும் வகையில் வீட்டிலிருந்து சிகிச்சை பெறும் பிணியாளர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் நோயாளிகள் ஏழு லட்சம் மக்கள் இருக்கிறூர்கள். அவர்களில் ஒரு ஆண்டு வருமானம் ரூ. 1,500 அளவுக்கு மேல் இல்லை என்று சான்றிதழ் பெற்று விண்ணப்பிப்பவர்கட்கு இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. அவர்கள் ஏழ்மை நிலைமை காரணமாக பாதிக்கப்படாமல் தொடர்ந்து இந்த மருத்துவ சிகிச்சை பெற்று குணம் அடையவேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் தொகை உதவித் தொகையாக கொடுக்கப்படுகிறது.

புள்ளி விவர இன்ஸ்பெக்டர்கள்.

***8. வினு—திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1972-ம் ஆண்டு, ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் சர்வீஸ் கமிஷன் மூலமாக புள்ளி விவர இன்ஸ்பெக்டர்கள் (Statistical Inspectors) என்ற பதவிக்கு இன்டர்வியூக்கு அழைக்கப்பட்டவர் எத்தனை பேர்?

(இ) அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் எத்தனை பேர்?

(உ) அதில் முஸ்லீம்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) புள்ளிவிவர இன்ஸ்பெக்டர் பதவிக்கு 1972 ஜனவரி, பிப்ரவரித் திங்களில் தமிழ் நாடு அரசு அலுவலர் தேர்வு ஆணைக்குழு நேர்முகத் தேர்வு எதுவும் நடத்தவில்லை.

(இ) & (உ) இவ்வினாக்கள் எழவில்லை.

THIRU R. PONNAPPA NADAR: May I know from the Hon. Minister Whether eleven Statistical Inspectors from among the Travancore-Cochin transferrd personnel have been recently reverted and if so, may I know the reasons therefor for their reversion?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால், விவரம் அளிக்கப்படும்.

Allotment of mechanised boats

* 9 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) the number of persons who have not been allotted mechanised fishing—boats in Kanyakumari district although they have paid the necessary deposits for the same; and

(b) when mechanised boats will be allotted to them?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) 274.

(இ) சீட்டுக் குலுக்கித் தெரிந்தெடுக்கும் முறை மூலமாக மீனவத் தொகுதியினருக்கு படகுகள் ஒதுக்கப்படுகின்றன. மேற் சொன்ன நடைமுறைக்கு இணங்க, இனிவரும் ஆண்டுகளில், மேற்சொன்ன 274 விண்ணப்பதாரர்களுக்கும் படகுகள் ஒதுக்கப் படும்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: சார், சீட்டு குலுக்கும் முறைப்படி படகுகள் ஒதுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதனால் 2—3 ஆண்டுகளுக்கு முன்பு மனு செய்தவர்களுக்குக் கூட படகு கிடைக்க வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது. அதை மாற்றி, அவர்கள் விண்ணப்பித்த தேதியை கணக்கில் எடுத்துக் கொண்டு சீனியாரிட்டி பேசிஸில் படகுகள் வழங்க அரசு எற்பாடு செய்யுமா?